[பேரவைத் தலைவர்]

3. அரசினர் சட்டமுன்வடிவு.

தமிழ்நாடு 1972-ம் ஆண்டு (மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதிக்குச்) சட்டங்களை நீட்டிப்பது குறித்து சட்டமுன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு (மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதிக்குச்) சட்டங்களை நீட்டிப்பது குறித்த சட்டமுன்வடிவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இச் சட்டமுன் வடிவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

4. அறிக்கைகள் அளித்தல்.

"வேலை வாய்ப்பு பயிற்சி", "தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்" ஆகியவை பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள்.

THIRU K. VEZHAVENDAN : Sir, I have pleasure to present two Reports today of the Estimates Committee, one on "Employment and Training" and the other on "Labour including Factories".

5. தனியார் அலுவல்கள்.

(1) சட்டமுன்வடிவுகள்.

(அ) 1971-ம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1971)—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது திரு. க. சுப்பு அவர்கள் பேசுவார்கள்.

திரு. க. சுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்திலே மாணவர்களும் பங்கு பெற வேண்டுமென்ற அடிப் படையில் திருத்தச் சட்டத்தில் ஏற்கெனவே கருத்துக்களைக் கூறியிருக்கிறேன்.